**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

EP.No.14/2012 in OS.26/2004 தேதி- 28.07.2025

(P.W.2) - ஜான்சன்

குறுக்கு விசாரணை

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் மர அறுவை நிலையத்தில் வேலை செய்து வருகிறேன். மனு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. அதனுடைய விஸ்திரனம் தெரியுமா என்றால் தெரியாது. என் முதல் விசாரனையில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் என்ன வழக்கு என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் என்ன நீதிமன்ற உத்தரவு போடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு எந்த நீதிமன்றத்தில் நடைபெற்றது என்று தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு விசாரனை வருவதற்கு முன்பு நான் கேரளாவில்தான் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சுமார் 15 ஆண்டுகள் வேலை செய்து வருகிறேன் என்றால் 2010-க்கு முன்பு 3 ஆண்டுகள் நான் இங்கு தான் வேலை செய்து வந்தேன் அதன் பிறகு வேலையில்லாததால் எங்கு வேலை கிடைக்கிறதோ அங்கு சென்று வேலை செய்து வருகிறேன். என் முதல் விசாரனையில் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் என்ன உத்தரவு பிறப்பபிக்கப்பட்டதா என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. மேற்சொன்ன உத்தரவின் நகல் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 08.07.2010 -ல் குறிப்பிட்டுள்ள அன்றுதான் நீதிமன்ற ஆணையர் மற்றும் நீதிமன்ற ஆமின் மனு பட்டிகை சொத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவு அடிப்படையில்தான் மேற்சொன்ன நீதிமன்ற ஆணையர் மற்றும் நீதிமன்ற ஆமின் நீதிமன்ற உத்தரை நிறைவேற்றினார் என்றால் நீதிமன்ற உத்தரவு பற்றி தெரியாது ஆனால் JCB இயந்திரம் மற்றும் காவல் துறையினர்கள் வந்தார்கள். என் முதல் விசாரனையில் என்னை வெட்டி கொன்றுவிடுவோம் என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை மனுதாரர்தான் கொடுக்கவேண்டும். மனு விவரம் பற்றி எந்த விவரமும் தெரியாமல் ராஜமணி ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிய்லல. நீதிமன்ற ஆணையர் மற்றும் நீதிமன்ற

ஆமின் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரை நிறைவேற்றினார்கள் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).